

ராகினி பிலிம்ஸ்

# பெண்ணின் பெருமை

டைரக்ஷன்......பி. புல்லையா

ராகினி பிலிம்ஸ்

# பெண்ணின் பெருமை

-:- நடிகர்கள் -:-

சிவாஜி **கணேசன்,** ஜெமினி **கணேசன்,**

**நாகய்யா, சாவித்திரி, சாந்தகுமாரி,**

**M. N.** ராஜம், பிரண்ட் ராமசாமி, **T. N.** சிவதாணு,

*மற்றும்*

**K.** துரைசாமி, **P. S.** ஞானம், **K. S.** அங்கமுத்து, செல்லம், நந்தி வேலாயுதம், **V. P.** பலராமன், **K.** நடராஜன், **G. V.** சர்மா, ராஜரத்தினம், **N.** திருவேங்கடம், **M. V.** ராஜு, **K.** சீனிவாசன், **S. G.** ஈஸ்வரன், பார்வதி அம்மாள், **D.** கோபால், விஜயலக்ஷ்மி, **K. V.** ரெங்கநாதன் **B. N. R.,**

**N.** ராமச்சந்திரய்யா

*ரீடா, இந்திரா, சரோஜா, ராஜேஸ்வரி, ராஜராஜேஸ்வரி, ஜெயந்தி, கமலா, லீலா, மீரா, B. கமலா, சரஸ்வதி, லலிதகுமாரி, கிருஷ்ணவேணி & ஸ்ரீதேவி*

ராகினியாரின்

# பெண்ணின் பெருமை

●

## கதைச் சுருக்கம்

**ஒரு நாள் சத்தியபுரத்தைச் சார்ந்த வயலிலே...**

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய் — வீணில் உண்டு களிப்போரை நிந்தனை செய்" என்ற பொன்மொழியை நன்மொழியாகக் கொண்ட விவசாயியின் பெண்ணுகப் பிறந்தாள் பத்மா. அவள், ஜமீன்தார் நிலத்தைச் சாகுபடி செய்துவந்த நமசிவாயம் பெற்ற நன்முத்து.

ஒரு நாள், வரி வசூலிக்க வந்தவருடன் வாதாடினுள் — உழவருக்கும் உரிமை உண்டெனப் போராடினுள். ஜமீன்தார் அவள் திறமையைக் கண்டு தன் இளைய மகன் நாகுவுக்கு உரிமையாக்கத் திட்டமிட்டார்.

**மணமகள் கிடைத்த மகா உத்ஸாகத்திலே...**

ஜமீன்தார் தன் இளைய மனைவி ரஜேஸ்வரியிடத்தில் உன் மகன் நாகுவுக்கு, ஒப்பற்ற மணமகள் நம் குப்பத்திலேயே கிடைத்து விட்டாள் என்று உரைக்க — ராஜேஸ்வரி, தன் அந்தஸ்துக்குத் தக்க பெண் இல்லை என்று மறுக்க — முகூர்த்தவேளை தவருமல் தன் மூத்த மனைவியின் மகன், பைத்தியம் பிடித்த ரகுவுக்கு பத்மாவை மணம் முடித்து விடுகிருர்.

**பைத்தியம் பிடித்த ரகுவை மணந்த பத்மா இன்ப இரவிலே...**

இலவுகாத்த கிள்ளையாய் ஏங்கித் துடித்தாள். நிலவும் அவளை நெருப்பாகத் தகிக்க, நிம்மதியின்றிப் படுத்தாள். மலர்ச் சோலையுண்டு; ஆனுல் மணத்தை நுகர வழியில்லை. தாமரைத் தடாகம் உண்டு; ஆனுல் தாகம் தணிய வழி இல்லை... இப்படியே பத்மாவின் இன்ப இரவெல்லாம் துன்ப இரவாக ஒடுகிறது.

**பைத்தியத்திற்கு தாயம்மா வைத்தியம் தேடும் வேளையிலே...**

இளைய மனைவியின் மகன் நாகுவின் சதி, நாகம் போல் சீறுகிறது. பதிபக்தி நிறைந்த பத்மாவின் அறிவுசிகிச்சையினுல் பதியின் பைத்தியம் தன்னுலே மாறுகிறது. இப்படி...

**காலச்சக்கரம் வேகமாகச் சுற்றிவரும் நாளிலே...**

*ஆத்திச்சூடி முதல், அரிய திருக்குறள் சாரத்தையும் ஆராய்ச்சி பெற்றான் ரகு. தன் உள்ளம் தெளிந்து, உலகத்தை உணர்ந்து, இல்லற வாழ்க்கையில் வள்ளுவர்–வாசுகி போல் இணைந்து வாழும் காலத்திலே— மாற்றாந் தாயும், அவள் மகனும் செய்யும் கொடுமையினால் பத்மாவும், ரகுவும் பாதிக்கப்படுகிறார்கள்.*

**பதவி மோகமும் சுயநல வேகமும் படாடோபம் செய்யும் காலத்திலே....**

*சிரிப்பால் மயக்கிய நீலாவின் சிலந்திக் கூட்டில் சிக்கிய நாகு, வெள்ளிப் பணங்களை அள்ளிவீசி அவள் விழியிலும், சதியிலும் பலியாகி வருகிறான். ஜமீன்தார் பலமுறை புத்தி புகன்றும் திருந்தவில்லை. குணமடைந்த ரகுவுக்கே ஜமீன்தார் பதவியைக் கொடுத்து விடுகிறார்.*

*நாகுவைக் கண்டிக்காத ராஜேஸ்வரியைக் கடிந்து சீறுகிறார். மனைவி கோபத்துடன் வெளியேறுவதைக் கண்டு, மாடியிலிருந்து பரபரப்புடன் ஜமீன்தார் கீழே வரும் வேளையில் தவறி வீழ்ந்து மரணப்படுக்கையில் படுக்கிறார்.*

*இளைய மகனைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறார். நீலாவின் லீலையில் சிக்கிய நாகு, தந்தையின் சவத்தின் முகத்தில்கூட விழிப்பதில்லையென சபதம் செய்கிறான். உயிரோடு போராடும் ஜமீன்தார், உயிலை ரகு பேருக்கே எழுதிவைத்து இந்த உலகத்தை விட்டு விடுதலை அடைகிறார். விதியுடன் சதியும் சேர்ந்து விளையாட ஆரம்பித்தது.*

*மரவுரி ஏந்திய ஸ்ரீராமனைப் போல் பத்மாவும், ரகுவும் பங்களாவை விட்டு வெளியேறுகிறார்கள். சத்தியபுரம் அவர்களுக்குச் சலுகை காட்டியதும், புயலுக்குப்பின் அமைதி ஏற்படுவதற்கு...*

**சதி உள்ளம் படைத்த ராஜேஸ்வரி திருந்தினாளா... ?**

**தம்பி நாகுவின் தாராதர உள்ளம் தவறியதா ?**

**சகோதர பாசம் கொண்ட ரகுவின் தன்மைக்கு ஏற்ற நன்மை கிடைத்ததா... ?**

**மரணத்தை எதிர்த்து மன்றாடிய பத்மாவின் மனம் குளிர்ந்ததா... ?**

''கண்ணகி பிறந்த வீடு – அதுவே
கன்னித் தமிழ் நாடு''

*என்ற உண்மையை* **''பெண்ணின் பெருமை''** *வெள்ளித் திரையில் விளக்கிக் காட்டும்.*

**சுபம்!**

## பாட்டுகள்

**சாமியார் பாட்டு** பாடியது : **கண்டசாலா**

[ 1 ]

உன் செயலால் எதும் ஆகும் — கிருஷ்ணு
என் செயலால் என்ன ஆகும்.... (உன்)

புன்னகை மேவும் உன் அழகாலே
புல்லாங் குழலின் இன்னிசையாலே

கன்னியரெல்லாம் தன்னேயே மறந்து—கோபி
காதல் போதையால் கனிந்து வருவார்... (உன்)

துணிந்து கோபியர் துகில்தனே உறிந்தாய்
கனிந்து கரமேந்த கண்ணு நீ மகிழ்ந்தாய்

துரௌபதையாளின் துயர்தனேக் கண்டு
துகில்தனே தந்து உதவி புரிந்தாய்... (உன்)

[ 2 ]

**பத்மாவும் தோழியரும்**



நடன அமைப்பு ; **சின்ன சத்யம்**
பாடியது : **ஜிக்கி & பார்ட்டி**

முகூர்த்த நாளும் முடிவாச்சா
முக்கணுங்கயரும் போட்டாச்சா... (மு)

முரட்டுக்காளே மாப்பிள்ளேயாம்
உருட்டு பொம்மை மணமகளாம்

அரட்டி மிரட்டி உன்னிடமே
அசலும் வட்டியும் வாங்கிடவே... (முகூர்த்த)

மகராஜன் வீட்டுத் திருமணமே
மஜான்னு நெனைக்குதுஉன் மனமே
ஜிகு ஜிகு வளையல் தக தக கங்கணம்
பள பள சேலையும் பட்டு ரவிக்கையும்—பூம் பூம்...
பூம் மாடு போல் சிங்காரிச்சு
பொதி கழுதை போல சுமந்திடவே... (முகூர்த்த)

மெத்தை வீடென்று துள்ளாதே—கண்ணை
நெற்றியில் வைத்துக் கொள்ளாதே
அத்தை மாமனும் இருக்காங்க—உன்
சத்தைக் கழற்றியே விடுவாங்க... (முகூர்த்த)

அறைக்குள்ளேதான் அடங்கிடணும்
ஆடுற காலும் ஒடுங்கிடணும்
சரியாக பேச தெரிஞ்சிக்கணும்—உன்
தலைகன மெல்லாம் எறங்கிடணும்.... (முகூர்த்த)

[ 3 ]

*பத்மா* பாடியது : **P. லீலா**

இதய வானில் ஒளியை வீசும்
இன்ப நிலாவே
இனிய வாழ்வில் இருள் உலாவி
மறையும் நிலாவே... (இன்ப)

அமைதி காண வழி இல்லாமல்
தவிப்பதினாலே
இமைகள் கூட நிலை மறந்து
ஏங்குதுன்னாலே... (இதய

தாரகையின் லீலையினால்
தயங்கி நின்றீரோ
தாபமிகும் வேளையிலே
தயை புரிவீரோ... (இதய)

மாறிடாத அமுத மழையில்
மனங் குளிராதோ
மாசிலாத எனது வாழ்வும்
மலரக்கூடாதோ – வாழ்வும் மலரக்கூடாதோ...(இதய)

[ 4 ]

*நீலவேணி* நடன அமைப்பு : ***சம்பத்*** – பாடியது : ***சுசீலா***

முடியுமா அது முடியுமா—எதைக்
கேட்டாலும் உம்மால் கொடுக்க முடியுமா... (முடியுமா)
முடியாத விஷயம் என்று நினைக்கக் கூடாது—அது
முடிந்து விட்டால் வண்டு போல பறக்கக் கூடாது...
(முடியுமா)

குரங்கு போல மரத்துக்கு மரம் தாவக் கூடாது—மனக்
கோயிலுக்குள் பூஜை என்றும் தவறக் கூடாது
குள்ள நரியைப் போல வேஷம் போடக் கூடாது—என்
உள்ளத்திலே உள்ளதை நான்
சொல்லாமல் தெரிந்து கொள்ள
[முடியுமா... (மு)



கற்பு நிலை தவறாத கன்னி நானுங்க—உங்க
காதலுக்கு அடிமையான பெண்ணைப்
[ பாருங்க
கொஞ்சம் என்னைப் பாருங்க...

கனவு போல எண்ணிடாமல் கவலே தீருங்க
கண்ணும் கண்ணும் கலந்ததினுல்—இந்த...
என்னுங்க! என்ன ஆகும் என்று சொல்ல முடியுமா....(மு)

[ 5 ]

*பத்மா* பாடியது : ***ஜிக்கி***

கண்ணு மறையாதேடா
கணமேனும் என்னே விட்டுப் பிரியாதேடா கண்ணு...
(கண்ணு)

கறவை தொழுவம் தேடி
கன்றுடன் வரும் மாலே
பறவை இனங்கள் யாவும்
பாடி உறங்கும் வேளே... (கண்ணு)

பட்டுப் பீதாம் பரமும்
கெட்டு விடும் கேளாயோ
பால் வடியும் வதனம்
திருஷ்டி படும் வாராயோ.... (கண்ணு)

கோபிகள் உனேக் கண்டால்



குறைகள் சொல்வாரடா
குலுங்கும் சதங்கையோடு
பதுங்கியே செல்லாதடா
கோவினங்கள் ஆவல் மிகும்
குழலிசை கானமடா
கொஞ்சிடவே காத்திருந்தாள்
குலமணி ராதையடா.... (கண்ணு)

பின்னணி பாடியது : ***சீர்காழி கோவிந்தராஜன்***

கன்னித் தமிழ் நாடு—இதுவே
கண்ணகி பிறந்த வீடு—நீ
எண்ணிப்பார் பெண்ணின் பெருமையை
விளக்கிடும் இலக்கிய ஏடு—நம் (கன்னி)

கணவனுக்காக அடிமையாகவே
கண்விழித்து காத்திருந்து
கண்யமாகவே இன்ப வாழ்வினில்
ரம்பை போலவே மகிழ்ந்து...
தனிமையிலும் அவர் மந்திரி போல
தக்க யோஜனை புகன்று
தாயைப் போலவே உணவு தந்து —பெருந்
தன்மையோடு தினம் அன்பு காட்டிடும் (கன்னி)

தன்மானம் வாழ்வின் சன்மானம் – என்ற
தன்மையை மறந்திடாது
பெண் மானம் காக்க தனது உயிரையும்
பெரிதாக எண்ணாது
பெண்ணின் பெருமையை மறவாது—இந்த
உண்மை என்றுமே தவறாது... (கன்னி)

[ 7 ]

**கோழி டான்ஸ்** நடன அமைப்பு :- V .P. பலராமன்

பாடியது :- **லீலா & ஜிக்கி**

கூவுது கூவுது சேவல் கூவுது
குயிலும் மயிலும் ஆடுது பாடுது
செல்வம் உன்னைத் தேடி வந்தது கேளீரோ—இனி
ஜெயமே உண்டு பயமே இல்லை வாரீரோ.. (கூவுது)

சதியுடன் விதியும்
விதியுடன் சதியும்
பட படவெனவே தட புடல் செய்து
பாஞ்சது ஓஞ்சது பாரீரோ.. (கூவுது)

உறங்காமலே எழுந்து வாராய்
தயங்காமலே நிமிர்ந்து பாராய்
நினைக்காதே கடந்த வாழ்வை
மதிக்காதே துடந்த வாழ்வை.. (கூவுது)

ஜெயமே உண்டு பயமே இல்லை வாரீரோ
ஜெயமே உண்டு - என்னாளும் பயமே இல்லை
பொன்னாளில்—கூவுது கூவுது (கூவுது)



[ 8 ]

**பத்மா** பாடியது :—**ஜிக்கி**

வந்து வந்து கொஞ்சுவதேன் வெண்ணிலாவே
அந்தரங்கம் புரிந்தாளே அல்லிபூவே..
(வந்து)

அந்த கார மேகம் நீங்கி
அழகு ஜோதி வீசுவதால்
அமுதமான சோலையிலே
குமுதம் எங்கும் வேளையிலே.. (வந்து)

இல்லறத்தின் காவியமே
இணை இல்லாத ஓவியமே
வள்ளுவரும் வாசுகி போல்
வளரும் இன்ப ஜீவிதமே.. (வந்து)

மறுமையிலும் இணைபிரியா
உரிமை தந்த உலகினிலே
ஒரு மலரில் இருமணமாய்
உலவும் இன்ப இரவினிலே
கரு மணிகள் இனிமையாக
கவிதை பாடும் நேரத்திலே
மறைமுகமாய் கள்வனை போல்
மறையாதே...அருகினில் வா (வந்து)



***காகு - நிலா***
பாடியது :-T. M. ***சௌந்தரராஜன்***
***& சுசீலா***



***நிலா:*** கடந்த ஞானியும் கடப்பரோ—இளங்
கன்னியர் காதலாலே... —பிறகு
***காகு:*** காஷாயம் திருவோட்டை மறப்பரோ —
[பெண்கள்
கண்களின் ஜாடையாலே..

அழுவதா இல்லை சிரிப்பதா—இந்த
அதிசயமான உலகத்தைப் பார்த்து.. (அழு)

**நீலா:** ஆராய்ந்து பாராமல் சந்தேகமே கொண்டு
போராடும் ஆடவரை நேராகவே கண்டு (அழு)

**நீலா:** காமத்தை விடவே காதலே பெரிதென்று
கவிகளும் சொல்லுராங்க..ஏன் அப்படி..?

**நாகு:** காமமே புயலென்றும் காதலே தென்றலென்றும்
கண்டதால் விள்ளுராங்க... (அழு)

**நீலா:** அழகோடு பருவமும் அமைந்து விட்டால்
அதுக்கும் ஓர் மதிப்பு தாங்க...

**நாகு:** — ஆமாங்க...உன்
அம்மாளைப் போலவே பழுத்துவிட்டால்
அதுக்கும் ஓர் மதிப்புதாங்க... (அழு)

[ 10 ]

**பின்னணி:** பாடியது :-*சீர்காழி கோவிந்தராஜன்*

உத்தமனே! உலகில்
நிலைப்பது சத்தியமே
உன்னை இழந்தாய் — உன்
உரிமை இழந்தாய்
உடன் பிறந்தவனுக்காக
யாவும் துறந்தாய்... (உத்)

அருந்தவம் செய்த தந்தை வாக்கையே
அன்புடன் சிரமேற் கொண்டாய்
அகிலமீதிலே தியாக மூர்த்தியாய்
அழியாப் புகழை அடைந்தாய் நீ (உத்)

**நீலவேணி :** நடன அமைப்பு :- ***பசுமர்த்தி***
***கிருஷ்ணமூர்த்தி***
பாடியது :- ***லீலா***

கண்டேன் கனவிலே என் பாங்கியே
கண்ணிறைந்த எழில் கொண்ட ஒருவனை... (கண்)
மந்தகாச மதனே மதிவதனே
சுந்தராங்கன் எவனே அருகிலே
மருவிடவே வந்தான் மாயவனே
மறவேனே சகியே நானே மயங்கிடவே
மனமே கவர்ந்தான் இன்றே... (கண்)
கோவைக்கனிமேல் தாவும் கிளி போல்
ஆவல் தந்தவன் யார டி...
பூவில் புதுநிலை காணும் வண்டெடன
மறைந்து சென்றான் பாரடி...
அழகுநகை புரிந்தான் பழகும் நிலை உணர்ந்தான்
ஆசையுடனே வலையை வீசி மறைந்தான்
மலைமாமகள் தருமாமறை வடிவேலவனே
அலைமேல் அரவணைமேல் துயில்வளர் [மாதவனே
கண் இமையில் கலந்தான் என்னைப் [பிரிந்தான்
என் நிலையை இழந்தேன் [பாங்கியே... (கண்)



*பத்மா* பாடியது :—*லீலா*

வாழ்க்கை ஓடம் கரை சேரும் முன்னே—புயல்
வந்தாலும் மயங்காதே — இடர்
தந்தாலும் தயங்காதே... (வாழ்)

வானிடிந்தாலும்
வசை நேர்ந்தாலும்
வாய்மையை தவருதே—உன்
நேர்மையை மறவாதே... (வாழ்)

நன்மையும் தீமையும் வாழ்வின் பாதையில்
நடமாடும் அதைப் பாராயோ — அதில்
உண்மையானதோர் நன்மையாதென — நீயே
உணர்ந்து தேராயோ... (வாழ்)

o o o

இந்த படத்தின் பாட்டுகளை
ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ், கொலம்பியா
இசைத்தட்டுகளில் கேட்கலாம்



ராகினி பிலிம்ஸ்

# பெண்ணின் பெருமை


## சிருஷ்டி கர்த்தாக்கள்

| | |
|---|---|
| வசனம், பாடல்கள் | ... தஞ்சை ராமையாதாஸ் |
| ஒளிப்பதிவு | ... P. L. ராய் |
| ஒலிப்பதிவு | ... N. சேஷாத்திரி |
| பாடல்கள் பின்னணி ஒலிப்பதிவு | ... T. S. ரங்கசாமி |
| சங்கீதம் | பி. என். ஆர்.<br>A. ராமாராவ் |
| பின்னணி சங்கீதம் | ... வேணு |
| பின்னணி பாடல்கள் | கண்டசாலா<br>T. M. சௌந்திரராஜன்<br>சீர்காழி கோவிந்தராஜன்<br>P. லீலா, ஜிக்கி, சுசீலா |
| ஆர்ட் | ... சுப்பா ராவ் |
| எடிடிங் | B. நரசிம்ம ராவ்<br>ஸ்ரீராமுலு |
| மேக்கப் | ஹரிபாபு<br>K. நாகேஸ்வர ராவ்<br>பெரியசாமி |
| ப்ராஸஸிங் | A. தியாகராஜன்<br>(விஜயா லாபரெட்டரி) |
| ப்ரொடக்ஷன் | ... R. ரங்கராஜன் |
| அஸோஸியேட் டைரக்ஷன் | ... A. சேஷகிரி ராவ் |
| உதவி டைரக்ஷன் | (வசனம்) K. தங்கமுத்து<br>K. ராகவேந்திர ராவ்<br>N. ராமச்சந்திரய்யா |
| ஸ்டூடியோ | ... ரேவதி |

தயாரிப்பு & டைரக்ஷன் :

## P. புல்லையா பி. ஏ.

Nathans, Madras 2.


எமது அடுத்த தயாரிப்பு!
சுதந்திரத்
திருநாள்